பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
24 03 2025 6 45
திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- நாட்டில் கடந்த பத்து ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக காசநோய் பாதிப்பு பெருமளவு குறைந்துள்ளதாக குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.
- உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக அடுத்த இரண்டு ஆண்டுகளில் இந்தியா உருவெடுக்கும் என்று மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் தமிழகம் தொடர்ந்து முன்னிலையில் உள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.
- சென்னை அண்ணா சாலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் உயர்மட்ட சாலைப் பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அறிவுறுத்தியுள்ளார்.
- ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் 4 விக்கெட் வித்தியாசத்தில் சென்னை அணி, மும்பை அணியை வென்றது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

உலக காசநோய் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்த தினத்தையொட்டி குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள செய்தியில், இந்தியாவை காசநோய் இல்லாத நாடாக மாற்ற ஒருங்கிணைந்த முயற்சிகள் தேவை என வலியுறுத்தியுள்ளார்.

காசநோய் உலகெங்கிலும் கோடிக்கணக்கான மக்களை சமூக மற்றும் பொருளாதார ரீதியாக பாதிப்பதாக அவர் கூறியுள்ளார்.

மத்திய சுகாதார அமைச்சகத்தின் தேசிய காசநோய் ஒழிப்பு திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு திருமதி திரொளபதி முர்மு பாராட்டு தெரிவித்துள்ளார்.

இந்த தினத்தையொட்டி பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சென்னையில் ஆளுநர் மாளிகையில் நடைபெறும் காசநோய் தடுப்பு தொடர்பான கருத்தரங்கில் தமிழக ஆளுநர் திரு ஆர்.என். ரவி பங்கேற்கவுள்ளார்,

<<<<>>>>

உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக அடுத்த இரண்டு ஆண்டுகளில் இந்தியா உருவெடுக்கும் என்று மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி கடந்த 10 ஆண்டுகளில் இருமடங்காக அதிகரித்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

சர்வதேச செலாவணி நிதியத்தின் தரவுகள் இதனை எடுத்துரைப்பதாக தெரிவித்துள்ள திரு. பியூஷ் கோயல், அமெரிக்கா, சீனா, ஜெர்மனி, இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் நாடுகளை விட விரைவாக உள்ளது என்றும் கூறியுள்ளார்.

விரைவில் உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக உருவெடுக்கும் என்று திரு பியூஷ் கோயல் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

சென்னை அண்ணா சாலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் உயர்மட்ட சாலைப் பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பான பணிகளை நேற்று ஆய்வு செய்த அவர், பாலம் கட்டும் பகுதிகளில் மண்ணின் தாங்கு திறன் சோதனை வரும் புதன்கிழமை நடத்த திட்டமிட்டுள்ளதாக தெரிவித்தார்.

குறித்த காலத்திற்குள் மூன்று கட்டப் பணிகளை தனித்தனியாக மேற்கொள்ளுமாறும் அதிகாரிகளுக்கு அமைச்சர் அறிவுரை வழங்கினார்.

<<<<>>>>

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் தமிழகம் தொடர்ந்து முன்னிலையில் உள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

இது தொடர்பாக மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், சென்னையில் 3 நாட்கள் நடைபெற்ற பயணச் சந்தை புதிய வணிக வாய்ப்புகளை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயணச் சந்தையில் சிங்கப்பூர், மலேசியா உள்ளிட்ட வெளிநாடுகளைச் சேர்ந்த சுற்றுலா முகவர்களுடன் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

உதகமண்டலத்தில் 499 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்படும் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

இந்த மருத்துவமனையை ஆய்வு செய்தபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பழங்குடியினருக்கென பிரத்யேகமாக 50 படுக்கை வசதிகளுடன் இந்த மருத்துவமனை அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மொத்தம் 700 படுக்கை வசதிகளுடனும், 10 அறுவை சிகிச்சை அரங்குகளுடனும் இந்த மருத்துவமனை கட்டப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நீலகிரி மாவட்டத்தில் புதிதாக 16 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்கள் திறக்கப்பட உள்ளதாகவும் திரு. மா. சுப்பிரமணியன் கூறினார்.

<<<<>>>>

அரசுப் பள்ளிகளின் தரத்தை உயர்த்தும் வகையில் தேசிய கல்விக் கொள்கை அமைந்துள்ளதாக பிஜேபி மாநில தலைவர் திரு. அண்ணாமலை கூறியுள்ளார்.

திருச்சியில் பிஜேபி சார்பில் நடைபெற்ற தேசிய கல்விக் கொள்கை தொடர்பான கொள்கை விளக்கப் பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், 5ஆம் வகுப்பு வரை தாய்மொழி வழிக் கல்வியை இது ஊக்குவிப்பதாக கூறினார்.

மாணவர்கள் உலகத்தரம் வாய்ந்த கல்வி மற்றும் பன்மொழித் திறன் பெறுவதை தேசிய கல்விக் கொள்கை உறுதி செய்வதாக அவர் தெரிவித்தார்.

தமிழகத்தில் தேசிய கல்விக்கொள்கை தொடர்பாக பிஜேபி நடத்தி வரும் கையெழுத்து இயக்கத்திற்கு மக்கள் ஆதரவு பெருகி வருவதாகவும் திரு. அண்ணாமலை குறிப்பிட்டார்.

<<<<>>>>

தேர்தல் நடைமுறைகளை வலுப்படுத்துவது தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன், தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் தலைமையில் சென்னையில் இன்று ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது.

தலைமைச் செயலகத்தில் மாலை 3 மணிக்கு இக்கூட்டம் நடைபெற உள்ளது.

திமுக, அஇஅதிமுக, காங்கிரஸ், பிஜேபி உள்ளிட்ட 12 அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில கட்சிகள் இக்கூட்டத்தில் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தேர்தல் அறிக்கையில் திமுக உறுதியளித்தபடி மாநில அரசு ஊழியர்களுக்கு பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் திரு. சண்முகம் வலியுறுத்தியுள்ளார்.

காஞ்சிபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்த நிதியில்லை என அரசு கூறுவது ஏற்புடையதல்ல என்று தெரிவித்தார்.

<<<<>>>>

மக்களுக்கு குறைந்த விலையில் தரமான மருந்துகளை வழங்கும் நோக்கில் பிரதமரின் மக்கள் மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன.

திருவள்ளூரில் இயங்கும் இந்த மக்கள் மருந்தகம் பெரிதும் பயனளிப்பதாக பயனாளி ஒருவர் தெரிவித்தார்.

<<<>>>>

தமிழகத்தின் சில இடங்களில் இன்று இரண்டு முதல் மூன்று டிகிரி செல்சியஸ் வரை வெப்பநிலை அதிகரிக்கக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை அதிகபட்ச வெப்பநிலை 36 டிகிரி செல்சியசை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 27 டிகிரி செல்சியசை ஒட்டியும் நிலவக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

தென்கொரியாவின் தென் கிழக்குப் பகுதியில் ஏற்பட்ட காட்டுத் தீயில் சிக்கி 4 பேர் உயிரிழந்தனர்.

<<<>>>>

ஜப்பானின் ஃபுஜி எரிமலை, 300 ஆண்டுகளுக்குப் பின்பு மீண்டும் வெடிக்க கூடும் என நிபுணர் குழு எச்சரிக்கை விடுத்துள்ளதை அடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை ஜப்பான் அரசு மேற்கொண்டுள்ளது.

<<<>>>>

இந்தியா - கிர்கிஸ்தான் இடையே கிர்கிஸ்தானின் டோக்மோக்கில் 14 நாட்கள் நடைபெற்ற கூட்டு ராணுவப் பயிற்சி நேற்று நிறைவடைந்தது.

<<<>>>>

மூன்று நாள் அரசு முறைப் பயணமாக சிங்கப்பூர் சென்றுள்ள கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால், கடல் சார் மேம்பாடு குறித்த மாநாட்டில் பங்கேற்கவுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் நீர்வளத்துறைத் திட்டங்கள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம், அத்துறைக்கான அமைச்சர் திரு. துரைமுருகன் தலைமையில் சென்னையில் நேற்று நடைபற்றது.

<<<<>>>>

வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில், போக்குவரத்துத்துறை பணியாளர்களுக்கான வழிகாட்டு நெறிமுறைகளை மாநில போக்குவரத்துத் துறை வெளியிட்டுள்ளது.

<<<<>>>>

தேனியில் புத்தகத் திருவிழாவை மாநில அமைச்சர் திரு ஐ. பெரியசாமி தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

திருவள்ளூரில் மக்கள் தொடர்பு திட்ட முகாம் மாவட்ட ஆட்சியர் தலைமையில் நாளை மறுநாள் நடைபெறும் என மாவட்ட நிர்வாகம் கூறியுள்ளது.

<<<<>>>>

சென்னையில் வரும் 29-ம் தேதி கோட்ட அளவிலான அஞ்சல் சேவை குறைதீர் முகாம் நடைபெறவுள்ளதாக அஞ்சல்துறை தெரிவித்துள்ளது.

<<<<>>>>

*__விளையாட்டுச் செய்திகள்__*

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் 4 விக்கெட் வித்தியாசத்தில் சென்னை அணி, மும்பை அணியை வென்றது.

சென்னையில் நேற்று நடைபெற்ற போட்டியில் டாஸ் வென்ற சென்னை அணி பந்துவீச தீர்மானித்ததையடுத்து, முதலில் பேட் செய்த மும்பை அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 155 ரன் எடுத்தது.

156 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய சென்னை அணி, 19 புள்ளி ஒரு ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 158 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

<<<<>>>>

இந்தியா ஓபன் தடகள போட்டியில் தமிழகத்தின் கவின் ராஜா வெள்ளிப் பதக்கம் வென்றார்.

பெங்களூருவில் நடைபெற்ற இப்போட்டியின் 20 வயதுக்குட்பட்டோருக்கான போல் வால்ட் பிரிவில் அவர் இப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

<<<<>>>>

டொமினிகாவில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஷஹஜா யாமளப்பள்ளி பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

<<<<>>>>

உலக கோப்பை கபடி போட்டியின் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் இந்தியா பட்டம் வென்றது.

<<<<>>>>